
கர்த்தர் காண்பித்த அதிசயங்களை மறந்துபோக மாட்டேன்



I Will Not Forget Thy Wonders

Album 20 Song 5

கர்த்தர் காண்பித்த

Thu 26 APR '07

78 சங்கீதம்

கர்த்தர் காண்பித்த அதிசயங்களை மறந்துபோக மாட்டேன்
அவருடைய செயல்களையும் மறந்துபோக மாட்டேன்
யுத்தநாளிலே புறமுதுகை நான் காட்ட மாட்டேன்
தேவனே உம் உடன்படிக்கையை கைக்கொண்டிருப்பேன்

எங்கள் பிதாக்களின் கண்களுக்கு முன்பாக
எகிப்து தேசத்திலே அதிசயங்கள் செய்தாரே
கடலைப் பிளந்து ஜலத்தை நிறுத்தி
பிதாக்களை தேவன் கடக்கச் செய்தாரே

பகலிலே மேகத்தினாலும் இரவிலே அக்கினியாலும்
வனாந்தரத்திலே நடத்திச் சென்றாரே
கன்மலையைப் பிளந்து தண்ணீரை குடிக்கக்கொடுத்து
நீரை நதிபோல ஓடிவரச் செய்தாரே

பிதாக்களின் இச்சைக்கேற்ற போஜனத்தைக் கேட்டார்கள்
தங்கள் இருதயத்திலே தேவனைப் பரீட்சைப் பார்த்தனர்
தூதர்களின் அப்பத்தை மனுஷருக்கு கொடுத்தார்
தென்றலை வீசச்செய்து பறவைகளையும் கொடுத்தார்

வானத்தின் தானியமாம் மன்னாவை உண்டிருந்தும்
திரளான பாவங்களைத் தின்று தொடர்ந்திருந்தும்
தேவனை நம்பாமல் மீண்டும் பாவம் செய்தனர்
தேவனின் கோபத்தாலே பலரும் மடிந்தனர்

ஜனங்களோ திரும்பிவந்து தேவனைத் தேடினர்
தேவனே கன்மலையும் மீட்பரும் என்றனர்
ஆனாலும் தங்கள் நாவால் பொய்களை சொன்னார்கள்
அநேகந்தரம் தமது கோபத்தை விலக்கிவிட்டார்

Nov '07	T	F	S	S	M	T	W	T	F	S	S	M	T	W	T	F	S	S	M	T	W	T	F	S	S	M	T	W	T
	1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13	14	15	16	17	18	19	20	21	22	23	24	25	26	27	28	29


I Will Not Forget
Thy Wonders
Album 20 Song 5